## 717 டாஸ்மாக் கடைகள் மூடல் அறிவிப்பானது

# த.வெ.க. அரசின் வெறும் கண்துடைப்பு நடவடிக்கையே!

### ‘தி இந்து’ நாளிதழ் விமர்சனம்!

சென்னை, ஜூன் 9 -

**தமிழ்நாடு முழுவதும் 717 டாஸ்மாக் கடைகளை மூடுவதாக த.வெ.க. அரசு அறிவித்துள்ளது வெறும் கண்துடைப்பு நடவடிக்கையே என ‘தி இந்து’ நாளிதழ் வெளியிட்டுள்ள சிறப்புக்கட்டுரை விமர்சித்துள்ளது.**

தமிழ்நாட்டில் டாஸ்மாக் கடைகள் மூடப்படுவது குறித்து ‘தி இந்து’ நாளிதழ் சிறப்புக் கட்டுரை ஒன்றை வெளியிட்டுள்ளது.

அதில், தமிழ்நாடு முழுவதும் பள்ளிகள் மற்றும் வழிபாட்டுத் தலங்களுக்கு அருகில் உள்ள 717 டாஸ்மாக் கடைகள் முதலமைச்சர் விஜயின் உத்தரவுப்படி மூடப்பட்டதும், வாடிக்கையாளர்கள் தங்களுக்கு அருகிலுள்ள அடுத்த டாஸ்மாக் கடைக்குச் செல்லத் தொடங்கி விட்டதாகவும், இதனால், மது அருந்துபவர்களால் ஏற்படும் தொல்லைகளுக்கு இன்னும் தீர்வு காணப்படவில்லை என்றும் சுட்டிக்காட்டப் பட்டுள்ளது.

மேலும் ஒரு கடை மூடப்படுவதால், அருகில் உள்ள வேறு கடையின் விற்பனை இரட்டிப்பாவதால், அரசுக்கு வருவாய் இழப்பு ஏதும் ஏற்படுவதில்லை என்றும், த.வெ.க. அரசின் டாஸ்மாக் கடை மூடல் அறிவிப்பு வெறும் கண்துடைப்பு நடவடிக்கையே என்றும் மதுபானத் துறையைச் சேர்ந்தவர்கள் கூறுவதையும் இக்கட்டுரை சுட்டிக்காட்டி உள்ளது.

**பொதுமக்களுக்கு இடையூறான கடைகள் மூடப்படவில்லை!**

மேலும், 717 டாஸ்மாக் கடைகள் மூடப்படுவதாக அரசு அறிவித்துள்ள போதிலும், பொதுமக்களுக்கு இடையூறாக உள்ள கடைகள் மூடப்படவில்லை என்பது நேரடி ஆய்வுகளின் போது தெரியவந்துள்ளதாகவும் இக்கட்டுரையில் குறிப்பிடப் பட்டுள்ளது.

அரசு மதுபானக் கடைகள் மூடப்படும் பகுதிகளில் தனியார் மதுக்கூடங்களில் வருவாய் அதிகரித்துள்ளதாகவும், சென்னை வேளச்சேரி உள்ளிட்ட பகுதிகளில் நடத்தப்பட்ட ஆய்வுகளில் இது தெரியவந்துள்ளதாகவும் இக்கட்டுரை சுட்டிக்காட்டி உள்ளது.

**மதுபான கடைகளால் விபத்து!**

ரயில் நிலையங்கள் மற்றும் முக்கிய சாலை சந்திப்புகளில் உள்ள மதுபானக் கடைகளால், விபத்து ஏற்படும் ஆபத்து உள்ளதால், இது போன்ற இடங்களில் உள்ள கடைகள் மூடப்பட வேண்டும் என்ற பொதுமக்களின் கோரிக்கையை அரசு ஏற்க மறுப்பது ஏன் என்றும் கேள்வி எழுப்பி உள்ள கட்டுரையாளர், மக்களின் உயிரைவிட, வருவாய் முக்கியம் என்ற எண்ணத்தில் அரசு செயல்படுவது முறையல்ல என்றும் விமர்சித்துள்ளார்.

மேலும், அரசின் உத்தரவை மீறி மதுப் பாட்டிலுக்கு 10 ரூபாய் கூடுதலாக பல டாஸ்மாக் கடைகளில் வசூலிக்கப் படுகிறது என்றும், இவ்விவகாரம் தொடர்பான அரசின் அறிவிப்புகளில் தெளிவு இல்லை என்றும் கட்டுரையாளர் விமர்சித்துள்ளார்.

**மதுபான கடைகள் மூடல் தாமதப்படுத்தும் செயல்!**

பள்ளி, ஆலயங்களுக்கு அருகில் 500 மீட்டர் தொலைவில் உள்ள மதுக்கடைகளை மூடும் அறிவிப்பு பல இடங்களில் மறுஆய்வுக்காக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளதாகவும், இந்த நடவடிக்கை மதுபானக் கடைகள் மூடப்படுவதை தாமதப்படுத்தும் செயல் என்றும் ‘தி இந்து’ நாளிதழ் வெளியிட்டுள்ள சிறப்புக்கட்டுரையில் குற்றஞ்சாட்டப்பட்டுள்ளது.

## சின்னதம்பி பெரியதம்பி



**சின்னதம்பி :** ஏண்ணே: “ பிரதமர் மோடியும், முதல்வர் விஜய்யும் என்ன பேசிக் கொண்டார்கள் என்பது சீக்ரெட். அதனை வெளியில் சொல்லக் கூடாது” என்று அமைச்சர் செங்கோட்டையன் பத்திரிகையாளர்களிடம் கூறியிருக்கிறாரே ?

**பெரியதம்பி :** **ஆமாம் தம்பி;அது சீக்ரெட் என்பதால் தான், மரபுக்கு மாறாக டெல்லியில் முதல்வர் பத்திரிகையாளர்களைச் சந்திக்க மறுத்து விட்டாரோ !**

**சீக்ரெட் என்றால் ஒன்று அவர்களது (பிரதமர் மற்றும் முதல்வர்) தனிப்பட்ட வாழ்க்கை சார்ந்ததாகவோ அல்லது உடனடியாகப் பொது வெளிக்குத் தெரியக்கூடாத அரசியல் சார்ந்ததாகவோ இருக்க வேண்டும்.**

**எப்படியும் பூனைக்குட்டி வெளியே வந்து தானே ஆக வேண்டும்.**

**ஆனால் இன்னொருவருடன் பகிர்ந்து கொண்டபின் அது சீக்ரெட்டாக இருக்காது ( “A secret shared is a secret no more”).**

## கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் முன்னிலையில்

# வி.சி.க. முன்னாள் எம்.எல்.ஏ. பனையூர் பாபு கழகத்தில் இணைந்தார்!

### மாற்றுக்கட்சியினர் உள்ளிட்ட 1000க்கும் மேற்பட்டோரும் இணைந்தனர்!




சென்னை, ஜூன் 9 -

**கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில் விடுதலை சிறுத்தைகள் கட்சியின் மாநில ஊடகப்பிரிவு முதன்மைச் செயலாளர் பனையூர் பாபு, Ex.M.L.A., தலைமையில் மாற்றுக் கட்சியினர் 1000க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்.**

இது பற்றிய விவரம் வருமாறு:-

கழகத் தலைவர் மு.க.ஸ்டாலின் அவர்கள் முன்னிலையில், நேற்று முன்தினம் (7.6.2026) காலை, அண்ணா அறிவாலயத்தில் உள்ள கழக அலுவலகத்தில் விடுதலைச் சிறுத்தைகள் கட்சியின் மாநில ஊடகப் பிரிவு முதன்மைச் செயலாளர் பனையூர் பாபு, முன்னாள் எம்.எல்.ஏ அவர்கள் தலைமையில் உப்பளத் தொழிலாளர் சங்கத் தலைவர் உமாநாத், செயலாளர்கள் எட்டியான், முனியாண்டி – விடுதலை சிறுத்தைகள் கட்சியைச் சேர்ந்த 188வது பகுதி செயலாளர் மடிப்பாக்கம் கோபு, 197வது வட்ட மீனவர் அணி செயலாளர் செல்லகுமார், திருக்கழுக்குன்றம் இளைஞர் அணிச் செயலாளர்கள் மூர்த்தி, கேசவன், த.வெ.க. கட்சியைச் சேர்ந்த திருக்கழுக்குன்றம் ஒன்றிய அமைப்பாளர் சண்முகம் –

காங்கிரஸ் கட்சியைச் சேர்ந்த வாயலூர் ஊராட்சி மன்ற முன்னாள் தலைவர் அசோகன், அ.தி.மு.க.வைச் சேர்ந்த புதுப்பட்டினம் கிளைச் செயலாளர் முகமது யூசுப், அண்ணா தொழிற்சங்க ஒன்றியச் செயலாளர் அமிஞ்சிகரை சாந்தகுமார், இடைக்கழிநாடு 5வது வார்டு செயலாளர் எம்.நைனாமுகமது, பா.ஜ.க.வைச் சேர்ந்த மாவட்ட தலைவர் பகதூர் சேட், மாவட்ட துணைத் தலைவர் சதீஷ், சித்தாமூர் ஒன்றிய இளைஞர் அணித் தலைவர் எம்.கோகுல், ம.தி.மு.க.வைச் சேர்ந்த சிறுபான்மை அணி இதயதுல்லா உள்ளிட்ட 1,000க்கும் மேற்பட்டோர் தி.மு.க.வில் இணைந்தனர்.

அதுபோது கழக பொருளாளர் டி.ஆர்.பாலு, எம்.பி., துணைப் பொதுச்செயலாளர் கனிமொழி கருணாநிதி, எம்.பி., சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின், உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எ.வ.வேலு, எம்.எல்.ஏ., காஞ்சிபுரம் தெற்கு மாவட்டச் செயலாளர் க.சுந்தர், சென்னை தெற்கு மாவட்டச் செயலாளர் மா.சுப்பிரமணியன், முன்னாள் எம்.எல்.ஏ.,அரவிந்த் ரமேஷ் ஆகியோர் உடனிருந்தனர்.

## திருமதி துர்கா ஸ்டாலினின் கார் ஓட்டுநர் – கழக முன்னோடி

# என்.ஆனந்தன் புதல்வர் ஏ.திருமலை (எ) திலீப் - எம்.வித்யா திருமண வரவேற்பு விழா!

### கழக முன்னணியினர் வாழ்த்துகின்றனர்!

சென்னை, ஜூன் 9 -

கழக முன்னோடியும், திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களின் கார் ஓட்டுநருமான என்.ஆனந்தனின் புதல்வர் திருமண வரவேற்பு விழா ஜூன் 20 அன்று நடைபெறுகிறது.

கழக முன்னணியினர் பலரும் இவ்விழாவில் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.

இவ்விழா பற்றிய விவரம் வருமாறு:-

திருமதி துர்கா ஸ்டாலின் அவர்களின் கார் ஓட்டுநரும், கழக முன்னோடியுமான என்.ஆனந்தன் - திருமதி ஏ.தேவிகா ஆகியோரின் புதல்வர் ஏ.திருமலை (என்ற) திலீப் - செங்கல்பட்டு மாவட்டம் - தாம்பரம் வட்டம் - கஸ்பாபுரம் ஆ.முருகன் - திருமதி எம்.ஜெயசக்தி ஆகியோரின் புதல்வி எம்.வித்யா ஆகியோரின் திருமண வரவேற்பு விழா 20.6.2026 - சனிக்கிழமை மாலை 6.30 மணி அளவில் சென்னை - பல்லாவரம் - கண்டோன்மெண்ட் போர்டு திருமண மண்டபத்தில் நடைபெறுகிறது.

இம்மண விழா வரவேற்பில் கழக முன்னோடிகள் பலரும் கலந்து கொண்டு மணமக்களை வாழ்த்துகிறார்கள்.



## மாநகரச் செயலாளர் மு.மதிவாணன் வரவேற்புரை! கவிஞர்கள் உரையாற்றினர்!

# திருச்சியில் கலைஞர் 103ஆவது பிறந்தநாள் விழா கருத்தரங்கம்!

### முன்னாள் அமைச்சர் – முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையேற்று சிறப்புரை!

*திருச்சி, ஜூன் 9 -*

*முத்தமிழ் அறிஞர், கலைஞர் அவர்களின் 103ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் பிரம்மாண்ட கருத்தரங்கம் (ஜூன் 7, 2026) திருச்சியில் அமைந்துள்ள புகழ்பெற்ற தேவர் ஹாலில் நடைபெற்றது.*

*இவ்விழாவிற்கு திருச்சி தெற்கு மாவட்டக் கழகச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை தாங்கி சிறப்பு உரை ஆற்றினார்.*

*மாநகரக் கழகச் செயலாளர் மு.மதிவாணன் அனைவரையும் வரவேற்று வரவேற்புரை ஆற்றினார்.*

**“கலைஞரின் எத்தனை கலைஞர்” கருத்தரங்கம்:**

*விழாவின் முக்கிய நிகழ்வாக “கலைஞரின் எத்தனை கலைஞர்” என்ற தலைப்பில் கவியரங்கம் மற்றும் கருத்தரங்கம் நடைபெற்றது.*

*இதில் தமிழகத்தின் முன்னணி கவிஞர்கள் பங்கேற்று கலைஞரின் பன்முகத்தன்மையை பின்வரும் தலைப்புகளில் போற்றிப் புகழாரம் சூட்டினர்.*

*கவி அரங்கத் தலைவர் கவிஞர் நெல்லை ஜெயந்தா, இலக்கிய இமயம்: கவிஞர் ஆலங்குடி வெள்ளைச்சாமி, திரை தமிழ் சிற்பி: கவிஞர் அருண் பாரதி, சமூகப் போராளி: கவிஞர் ராகவ் ரமேஷ், அரசியல் சாணக்கியர்: கவிஞர் தஞ்சை இனியன்.*

*நிகழ்ச்சியின் நிறைவாக, மார்க்கெட் பகுதிக் கழகச் செயலாளர் ஆர்.ஜி.பாபு அனைவருக்கும் நன்றி உரை ஆற்றினார்.*

*திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க. இந்த விழாவிற்கான விரிவான ஏற்பாடுகளைச் செய்துள்ளனர்.*

*இந்நிகழ்வில் தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் வண்ணை அரங்கநாதன், சேகரன், சபியுல்லா, மாநில அணி நிர்வாகி செந்தில் மற்றும் , மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, பேரூர், வார்டு, வட்ட, கிளைக் கழக நிர்வாகிகள் அணிகளின் அமைப்பாளர்கள் உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் கழகத் தோழர்களும், பொதுமக்களும் திரளாகப் பங்கேற்று விழாவை சிறப்பித்தனர்.*




முத்தமிழறிஞர், கலைஞர் அவர்களின் 103ஆவது பிறந்தநாள் விழாவை முன்னிட்டு, திருச்சி தெற்கு மாவட்ட தி.மு.க சார்பில் பிரம்மாண்ட கருத்தரங்கம் 7.6.2026 அன்று திருச்சியில் அமைந்துள்ள புகழ்பெற்ற தேவர் ஹாலில் நடைபெற்றது. இவ்விழாவிற்கு திருச்சி தெற்கு மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான முனைவர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமை தாங்கி சிறப்புரை ஆற்றினார். மாநகரச் செயலாளர் மு.மதிவாணன் வரவேற்புரை ஆற்றினார். இதில் முன்னணி கவிஞர்கள் உரையாற்றினர்!